www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

51

ஜே.விதலைவர் ரோகண விஜயவீரா கைது செய்யப்பட்டிருந்த போதிலும்- ஜே.வி.பியின் மத்திய குழு ஏற்க னவே திட்டமிட்டபடி 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி தனது தாக்குதல் நடவ டிக்கையை ஆரம்பித்தது.

முதல் தாக்குதல் வெள்ள

## 1971 ஏப்ரல் புரட்சியும் இந்திய இராணுவத்தின் வருகையும்

வாயா பொலிஸ் நிலையத்தின் மீது நடந்தது. அதைத் தொடர்ந்து இலங்கையின் வடக்கு கிழக்கு தவிர்ந்த சிறீலங்காவின் பெரும் பகுதிகளில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்கள் ஒரே நாளில் தாக்கீப்பட்டன.

ஏராளமான சிங்கள இளை ஞர்கள் பங்கு பற்றிய இந்தத் தாக்குதல்களினால் பல பொலி சார் உயிரிழந்தனர். பலர் காயங் களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். தெற்கிலிருந்த பல பொலிஸ் நிலையங்கள் முற்றாக அழிக்கப்பட்டதை அடுத்து, அந்தப் பகுதி JVP யின் கட்டுப் பாட்டுக்குள் வந்தது.

ரோகண விஜய வீராவை கைது செய்தவுடன் புரட்சி அடங்கிவிடும் அல்லது பின் போடப்பட்டுவிடும் என்று எதிர் பார்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அரசாங்கம் ஏமாந்து போய்விட்டது. இவ்வ ளவு தூரம் நாடு தழுவிய அள வுக்கு தாக்குதல்கள் அதுவும் ஒரே நேரத்தில் நடக்கும் என்று

> புரட்சியை அடக்குவதற்கு எந்த சோசலிச நாடுகளிலிருந்தும் முதலாளித்துவ நாட்டுப் படைகளையும் கூட, உதவிக்கு வரவழைக்க முடியாத நிலையில் JVP யினரது இந்திய விஸ்தரிப்பு வாதக்கொள்கை, அவர்களை அழிப்பதற்கு இந்தியப் படைகளை அழைப்பதற்கு 'உதவி செய்யக்கூடிய காரணமாக' இருந்தது.

அரசாங்கம் கனவிலும் எதிர் பார்க்கவில்லை. உண்மையிலேயே அரசாங்கம் பயந்து போய்விட் டது.

கொழும்புச் சிறையில் ரோகண விஜயவீராவை பாது காப்பாக தடுத்து வைத்திருக்க முடியாது என எண்ணிய அர சாங்கம், உடனடியாக அவரை யாழ்ப்பாணம் டச்சுக் கோட் டையில் இருந்த சிறைச் சாலைக்கு இடம் மாற்றியது.

1971 ஏப்ரல் 5-ம் திகதி தாக் குதலை ஆரம்பித்த JVPயினர் ஏப்ரல் 12-ம் திகதிவரை தொடர் தாக்குதல்கள் மூலம் சிறீலங்கா வின் மூன்றில் ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மற்றைய பகுதி களை கைப்பற்றுவதற்காக முன் னேறிக்கொண்டிருந்தார்கள்.

சிறீலங்கா அரசாங்கத்திடம் அப்போதிருந்த படையினரின் எண்ணிக்கையை விட புரட்சி யில் பங்கெடுத்துக்கொண்டிருக் கும் JVP உறுப்பினர்களின் எண் ணிக்கை அதிகமாக இருந்தது. எனவே முப்படைகளையும் பயன்படுத்தி புரட்சியை நசுக்க அரசாங்கத்திடம் போதிய பலம் இல்லாம்ல் இருந்தது. JVP யினர் அடர்ந்த காட்டுப்பகுதிகளில் தளங்களை அமைத்திருந்ததால் அவற்றை கண்டறிந்து தாக்கு தல் நடாத்துவதற்கான பலம் விமானப்படையிடம் இருக்க வில்லை. அக்காலத்தில் சிறீ லங்கா விமானப் படையினரி டம் சில சிறிய ரக போக்கு வரத்து விமானங்களே இருந் தன. தரைப்படைக்குள் (இரா ணுவம்) JVP இயக்கம் ஊடுருவி இருப்பதாக புலனாய்வுத் துறை யினர் தெரிவித்திருந்ததால் அவர் களையும் பயன்படுத்த முடி யாத நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

கொழும்பு - கண்டி முதலான முக்கிய நகரங்களை பாதுகாக் கும் பொறுப்புக்கு அரசாங்கம் கடற்படையை அழைத்திருந்தது.

சிறீலங்கா கடற்படையில் அக் காலத்தில் அதிகளவு கண் டிய சிங்களவர்களும் சில தமிழ் அதிகாரிகளும் இருந்ததால் கரையோரச் சிங்களவர்களின் இயக்கம் என்று வர்ணிக்கப் பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் அதற்குள் ஊடுருவி இருக்க மாட்டார்கள் என்று அரசாங் கம் நம்பியது.

இதைவிட JVP இயக்கம் மார்க்சிச, லெனினிச, மாவோ இச, சேகுவரா இச அடிப்படை களில் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற முயல்வதாக ஏற்க னவே பிரகடனப்படுத்தியிருந் தது கூட அரசாங்கத்திற்கு சிக் கலை ஏற்படுத்தியிருந்தது.

அப்போது ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட் டணி அரசாங்கம் தாம் ஏகாதி பத்திய அணிக்கு எதிரான இடது சாரி அணியைச் சேர்ந்தவர்கள் என்று முத்திரை குத்தியிருந்தார் கள். கொழும்பில் தமது கட்சி யின் தாபகர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்காவின் ஞாபகார்த்தமாக ஒரு மாபெரும் சர்வதேச மகாநாட்டு மண்ட பத்தை கட்டும் பணிக்கு மக்கள் சீனக் குடியரசின் உதவியை நாடியிருந்ததோடு, அதற்கான நிர்மாணப்பணிக்காக சீனப் பொறியியலாளர்களை வரவ ழைத்துமிருந்தார்கள். அதை விட வட கொரியா, சோவியத் யூனி யன், கியூபா போன்ற சோசலிச நாடுகளுடனேயே அதிகளவுக்கு நெருக்கமான உறவுகளைக் கொண்டும் இருந்தார்கள்.

இந்த நிலையில் JVP யின ருக்கு-சீனாவும் வடகொரியா வும் ஆயுத உதவியும், நிதி உதவி யும் வழங்கியதாக 'கதை' பரவி யது, அரசாங்கத்திற்கு மிகவும் சிக்கலான ஒரு நிலையை உரு வாக்கியது.



புரட்சியை அடக்குவதற்கு எந்த சோசலிச நாடுகளிலிருந் தும் படை உதவி கோரமுடியாத நிலையில் அரசாங்கம் இருந்தது. அதுபோல் எந்த முதலாளித் துவ நாட்டுப் படைகளையும் கூட, உதவிக்கு வரவழைக்க முடியாத நிலையும் அரசாங்கத் திற்கு இருந்தது. அப்போது அவர்களுக்கு இருந்த ஒரே வழி - இந்தியாவின் உதவியைப் பெறுவதே.

ஏற்கனவே சிறீலங்கா பிரத மர் சிறீமாவோ பண்டாரநாயக் காவுக்கு இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி யுடன் நெருக்கமான உறவு இருந் தது. அதைவிட JVP யினரது இந் திய விஸ்தரிப்பு வாதக்கொள்கை, அவர்களை அழிப்பதற்கு இந்தி யப் படைகளை அழைப்பதற்கு 'உதவி செய்யக்கூடிய காரண மாக' இருந்தது.

சிறீமாவோ பண்டாரநாய- க்கா விடுத்த அவசர வேண்டு கோளை ஏற்று இந்தியா 1971-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2-ம் வாரத்தில் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி வைத் தது. இந்தியப்படைகள் இலங் கைக்கு வரவழைக்கப்பட்ட விப ரம் சிங்கள மக்களுக்குத் தெரி யாதபடி மூடிமறைக்கப்பட்டி ருந்தது.

**- நக்கீரன்**

## கிடைக்கப் பெற்றோம்

# செம்பருத்தி



'பூமியில் பூத்த மலர்களிலே உயர் பொன்மலர் மாறிடப் பூக்கள் அம்மா' எனும் விருது வாக்கியத்துடன் வெளிவந்துள் ளது 'செம்பருத்தி'!

மலேசியாவில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ள இச் சஞ்சிகை மலேசியவாழ் தமிழ் பேசும் மக்களின் நலன் பற்றிய அக்கறையை முதன்மையாகக்கொண்டுள்ளது.

வெளிவந்திருக்கும் முதல் இதழ், 'வருங்கால தலைவர்களான இன் றைய இளைய சமுதாயமான மாணவர்களின் எதிர்காலம் யார் கையில் இருக்கின்றது? என்ற கேள்வியை சிந்தனைக்கு முன் வைத்துள்ளது.

தமிழ்ப் பள்ளிகளின் நிலை பற்றியும் அப்பள்ளிகளில் பெற்றோர் கொள்ள வேண்டிய கவனம் பற்றியும் அக்கறை கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் போராட்டம் அவர்களின் வாழ்வு அவலம் பற்றியும் தன்னுள் பதிவுகளையும் கொண்டிருப்பதுடன் தனது ஆதரவையும் 'செம்பருத்தி' வெளிப்படுத்துகின்றது. ஒரு சஞ்சிகையாகத் தோற்றம் காட்டும் செம்பருத்தி இன்னமும் தன்னுள் சுவை காட்டும் அம்சங்களை உள்ளடக்கவேண்டும்.

பயன் தரும் பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கியிருக்கும் செம்பருத்தி மலேசிய மண்ணின் மணம் இன்னும் அதிகமாய்க் கமழச் செய்வதில் அக்கறை காட்டுவது சஞ்சிகையின் தனித்துவத்தைப் பேண வழி வகுக்கும். இவ்விதழைப் பெற விரும்புவோரும் அச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்க விரும்புவோரும் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**SEMPARUTI**
Peti surat 10915, Pejabat Pos Besar
50728 Kuala Lumpur
தொலைபேசி: 03-2919363, 03-2910418
தொலைநகல்: 03-2918272

செம்பருத்தி இதழில் வெளியான ஒரு பகுதி:

## உலகம் தழுவிய 'பொன்' நோய்

பொன் மீது வளர்ந்துவரும் மோகம் தென் ஆசியாவிற்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது.

சென்ற வருடத்தின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் 900 தொன்களுக்கு மேற்பட்ட பொன்னிற்கான தேவை ஈடு செய்யப் பட்டுள்ளது.

இது ஒரு (பொற்) சாதனையாகும்.

இது 1995-ம் ஆண்டு இதே காலப்பகுதியிலும் 11 சதவிகிதம் அதிகமானதாகும்.

பிரித்தானியர்கள் 16 சதவிகித அதிகரிப்பை பொன் ஆபர ணக் கொள்வனவில் காட்டியுள்ள அதேவேளை பிரெஞ்சுத் தரப் பினர் 2 சதவிகித வீழ்ச்சியினைக் கண்டுள்ளனர்.

அமெரிக்கர் 742 தொன் பொன் தேவையைப் பூர்த்தி செய் துள்ளனர்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் 170.8 தொன்களை கொள்வ னவு செய்துள்ள அதேவேளை வளர்ச்சியடையும் நாடுகள் 552.3 தொன்களை கொள்வனவு செய்துள்ளனர்.

வ்ளர்ச்சியடைந்த நாட்டினருக்கான 'பொன் தேவை' யிலும் கூடுதலான 'பொன்தேவை' வளர்ச்சியுடையும் நாடுகள் கொண்டி ருப்பது அந்நாடுகள் தமது மக்களை, பொன்னால் மகிழ்விக்கின் றன என்பதல்ல. கருத்து மாறாக, சடங்குகள் சம்பிரதாயங்களின் தேவை, பெருத்த ஜனத்தொகை, முதலீடு தொடர்பான தவறான பார்வை ஆகியனவே காரணங்களாகும்.

படிப்பகம்